திரு. கே. வடிவேலு : கடந்த 1974-75 ஆம் ஆண்டிலே இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு குடியேறிய அகதிகள் எத்தனை பேர்? அவர்களுக்கு கடந்த கால அரசு என்னென்ன நன்மைகள் செய்தது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி என்று சொன்னீர்கள். அடுத்த கேள்விக்குப் பதில் சொன்னால், அதன்மேல் துணைக் கேள்விகள் கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியின் பதிலும் இதனுடன் தொடர்புள்ளதாகத்தான் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் அவர்கள் பர்மா அகதிகளைப்பற்றி விடை அளித்திருக்கிறார்கள். இலங்கை அகதிகளைப்பற்றி இன்னும் பதில் அளிக்கவில்லை. எனவே, அடுத்த கேள்விக்கும் விடை அளித்தால், துணைக் கேள்விகள் கேட்பதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகளைப்பற்றிய கேள்வி 21-க்கும் பதில் சொல்லவும்.

இலங்கை அகதிகள்.

*21 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1976, 1977 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குடியேறிய இலங்கை அகதிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : 1976-ல் 45,327 நபர்கள் அடங்கிய 10,977 குடும்பங்களும், 1977-ல் (9—7—1977 முடிய) 26,944 நபர்கள் அடங்கிய 6,702 குடும்பங்களும் தமிழ்நாட்டில் குடியேறினர்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த பர்மா அகதிகளுக்கும், தகுதிவாய்ந்த இலங்கை அகதிகளுக்கும் நபர்கள் அடங்கிய 10,977 குடும்பங்களும், 1977-ல் (9—7—1977 அரசுத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை அளிப்பதற்கான யோசனையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

TRUTH ALONE TRIUMPHS

1977 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி போன்ற இடத்தில் பர்மா அகதிகள் காலனி என்று இரண்டு காலனிகள் இருக்கின்றன. அங்கே அவர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர், ரோடுகளுக்கு விளக்கு போன்றவைகள் இல்லை. அதை இந்த அரசு கவனிக்குமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா: பர்மா அகதிகள் 143,463 பேர்களில் 55,070 பேர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மீதம் இருக்கிறவர்களுக்கும் இந்த வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா? அவர்களுக்குத் தரப்படுகின்ற இருப்பிடங்களுக்கு வசதிகள் செய்யப்படுமா? தற்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் பயன்படும் வகையில் இல்லை. அந்தக் கடனைப் பயன்படக்கூடிய வகையில் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற, இந்தியத் துணை கண்டத்தில், குறிப்பாக தமிழக மக்கள் தமிழகத்திற்கு ஆங்காங்கே வந்து கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்குப் பண உதவி செய்தபோதும், வேலைவாய்ப்பு தந்த போதும் அவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்று அதைப் பயன்படுத்தி சரிவர நடத்த முடியாதபோது சில சிக்கல்கள் ஏற்பட்டது உண்மை. அதைப் பற்றி நாங்கள் பரிசீலித்து புதியதொரு திட்டத்தை அமைத்து அதை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். ஆகவே, இந்தக் கேள்விகளைக் கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு அவகாசம் தந்து அதற்கேற்ப ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 5

திரு. மு. கருணாநிதி: சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து 5 லட்சம் பேர் இந்தியாவுக்கு வரவேண்டுமென்று முடிவானது. இதுவரை எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இதுவரை இரண்டரை லட்சம் பேர் வந்திருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை அளிக்கப்படுகிறது. ஆனால் ஒரு குடும்பத்திற்கு ஒரு நபருக்கு மட்டுந்தான் வேலை அளிக்கப்படுகிறது. இரண்டு அங்கத்தினர்கள் உள்ள ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளித்தால் பரவாயில்லை. எட்டு, பத்து பேர் உள்ள குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் வேலை கொடுத்தால் போதுமானதாக இல்லை. ஆகவே, குடும்பத்தில் இருக்கும் எண்ணிக்கையைப் பார்த்து ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. அந்த முறையில்தான் செயல்பட முடியும். ஒரே குடும்பத்தில் நாலைந்து பேருக்கு இடம் அளிப்பது மற்றக் குடும்பங்களுக்கு வாழ வழி செய்வதாக ஆக முடியாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பர்மா அகதிகள், இலங்கை அகதிகள் என்று சொல்லுவது ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அவர்களை குடிபெயர்ந்த தமிழர்கள் என்று சொல்லுவது நலமாக இருக்கும். சென்னையில் இருக்கும் பர்மா பஜாரில் கடை நடத்தும் தமிழர்கள் கடைகளைக் காலி செய்ய வேண்டுமென்று அடிக்கடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முந்திய அரசு அவர்களுக்கு அங்கேயே கடைகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அறிவித்திருந்தது. அந்த முறையில் அவர்களுக்கு அங்கே நிரந்தரமாகக் கடைகள் கட்டிக் கொடுக்க வழிவகைகள் செய்யப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பரிசீலிக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: வியட்நாம் அகதிகள் எண்ணிக்கை எவ்வளவு?

1977 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: வியட்நாமிலிருந்து 330 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: பர்மா அகதிகள் செங்கற்பட்டு மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் தங்க எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருந்தும் அங்கு கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களில் அந்த மக்கள் வாழாததால் காலியாக இருக்கின்றன. மீண்டும் அவர்கள் அங்கே குடியேற்றப்படுவார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பர்மா-இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுகிற அகதிகளுக்கு அங்கு வீடு, நிலம் போன்ற பலவிதமான சொத்துக்கள் இருந்தனவே, அதையெல்லாம் விற்றுக் கொண்டுவரவோ அல்லது கொண்டுவரக்கூடிய சொத்துக்களைக் கொண்டுவரவோ அனுமதிக்கப்பட்டார்களா? அல்லது அவர்கள் வெறும் கையோடு வெளியேற்றப்பட்டார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு தமிழ்நாட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கக் கூடிய திட்டமொன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்தும் பர்மாவில் இருந்தும் இங்கே குடிபெயர்ந்துள்ள ஜனங்களில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கணிசமான தொகையினர் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு உதவியாக நீலகிரி மலையில் புதிதாகத் தேயிலைத் தோட்டங்கள் உருவாக்கி வேலை கொடுக்கிற திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, அப்படி நிறைவேற்றப்பட்டு இருந்தால் எவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது? அந்தத் திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படுமானால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

[1977 ஆகஸ்ட் 5

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: நீலகிரி தேயிலைத் தோட்டங்களில் கிட்டத்தட்ட 904 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் வந்த அகதிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. மேலும் இரண்டு லட்சம் பேர்கள் அகதிகளாக வருகிற நிலைமை இருப்பதாலும் அந்தச் சுமையை தமிழ்நாடு தாங்கிக் கொள்ள முடியாது என்ற நிலைமையில் தண்டகாரன்யம், அந்தமான் போன்ற இடங்களிலேயும் இந்தியாவில் உள்ள வேறு மாநிலங்களிலேயும் குடியமர்த்துவதாகவும் அந்தச் சுமையை அகில இந்திய அளவிலே பங்கிட்டுக் கொள்கிற முறையிலேயும் மத்திய அரசு தெரிவித்திருந்தது. அதை தமிழ்நாடு அரசு வற்புறுத்துமா? அவர்களையெல்லாம் அந்தமானிலே குடியேற்று வதற்கும் இந்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நிச்சயமாக முயற்சிக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, பர்மா விலிருந்து வந்த அகதிகள் சென்னையிலே நேதாஜி நகரிலே குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே சுகாதார வசதிகள், மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை, ஆகவே அவை உடனடியாகச் செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. என். இராமச்சந்திரன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற நாடுகளைப்பற்றிப் பேசக் கூடாது. இந்தக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

திரு. கே. உச்சி: நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் பகுதியிலே குடி அமர்ந்தவர்கள் சிறு சிறு பூமிகளை விவசாயம் செய்ய

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-27—9-28-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் பூமிகளையெல்லாம் அவர்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தனிக் கேள்வி போடவும்.

திரு. எ. சுவாமிதாஸ்: இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் வந்த அகதிகள் தோட்டத் தொழில் செய்து வந்தவர்கள். எங்கள் மாவட்டத்திலே கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலமோர் பகுதிக்கு அடுத்தாற்போல் அரசுக்குச் சொந்தமான abandoned எஸ்டேட்டுகள் நிறைய இருக்கின்றன. அரசு அவற்றை யெல்லாம் அகதிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பேரவை நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு அனுப்புவது குறித்து.

* திரு. என். கிட்டப்பா: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவை நிகழ்ச்சிகள் பேரவை விடுதிக்கு அனுப்பப்படுகிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தப் பேரவையிலே அது குறித்து எடுத்துச் சொல்லி இருந்தும் நேற்றைய தினம் சேர்த்து நான்கு நாட்களாக வரவில்லை. அங்கே உள்ளவர்களிடம் அதை மீண்டும் மீண்டும் கேட்டும்கூட அவர்கள் தருவதில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அஜெண்டாவா?

* திரு. என். கிட்டப்பா: அஜெண்டா தான், அட்லீஸ்ட் அஜெண்டா.